# சுன்னாவை பாதுகாப்பதில் ஸஹாபாக்களின் பங்கு

# PART-01

[ Tamil – தமிழ் – تاميلي ]

M.S.M.இம்தியாஸ் யூசுப் ஸலபி

2013 - 1435

IslamHouse.com

# دور الصحابة في حفظ السنة-1

« باللغة التاميلية »

محمد إمتياز يوسف

2013 - 1435

IslamHouse.com

# சுன்னாவை பாதுகாப்பதில் ஸஹாபாக்களின் பங்கு

# PART-01

## M.S.M . இம்தியாஸ் யூசுப் ஸலஃபி.

வஹி மூலம் அல்குர்ஆன் இறங்கிக் கொண்டிருந்த போது அதனை எழுதிப் பாதுகாப்பதில் முழு கவனம் செலுத்திய நபி (ஸல்) அவர்கள் இஸ்லாத்தின் ஆரம்ப காலகட்டத்தில் ஹதீஸை எழுதி வைத்துக் கொள்ள ஆர்வமூட்ட வில்லை. குர்ஆனும் ஹதீஸும் இரண்டறக் கலந்து விடுமோ என்ற அச்சமே அதற்கு காரணமாகும் . எனினும் சில நபித் தோழர்கள் ஹதீஸ்களை எழுதக் கேட்ட போதும் எழுதி பாதுகாத்து வைத்துக் கொண்ட போதும் அதனை நபியவர்கள் தடுக்க வுமில்லை.

நபித்தோழர்களில் என்னை விட அதிகமாக ஹதீஸ்களை அறிந்தவர் எவருமில்லை. எனினும் அப்துல்லாஹ் இப்னு அம்ரு ( ரலி) அவர்கள் ஹதீஸ்களை எழுதி வைத்துக் கொள்ளக்கூடியவ ராக இருந்தார். நான் எழுதிக் கொள்ள மாட்டேன் (மனனமிட்டுக் கொள்வேன்). (நூல்: புகாரி-113)

ஹதீஸ்களை எழுதி வைத்துக்கொள்ள நான் நபி (ஸல்) அவர் களிடம் அனுமதி கேட்டபோது எனக்கு அனுமதி தந்தார்கள் என அபூ ஹுரைரா (ரலி) அறிவிக்கிறார்கள். (நூல்: பத்ஹுல் பாரி)

நபி(ஸல்) அவர்களிடமிருந்து கேட்கக் கூடிய ஒவ்வொன்றையும் நான் எழுதக் கூடியவனாக இருந்தேன். நீ எழுதிக் கொள். என் உயிர் எவன் கைவசம் உள்ளதோ அந்த அல்லாஹ்வின் மீது சத்தியமாக என் வாயிலிருந்து சத்தியத்தைத் தவிர வேறு எதுவும் வெளியாவதில்லை" என நபி(ஸல்) கூறினார் கள். ( அறிவிப்பவர்: அப்துல் லாஹ் இப்னு அம்ரு (ரலி), நூல்: பத்ஹுல் பாரி)

மஹ்மூத் பின் ரபீஆ ( ரலி) அறிவிக்கிறார்கள்: நான் மதீனாவுக் குச் சென்று இத்பான் இப்னு மாலிக் (ரலி) அவர்களைச் சந்தித்து தங்களைப் பற்றி ஒரு செய்தி எனக்கு எட்டியது. ( அது பற்றி கூறுங்கள்) என்றேன். அப்போது இத்பான் ( ரலி) அவர்கள் என் பார்வையில் ஏதோ ஏற்பட்டு ( பார்வை தொலைந்து) விட்டது. ஆகவே நான் அல்லாஹ்வின் தூதரிடம் ஆளனுப்பி நீங்கள் வந்து என் வீட்டில் தொழ வேண்டும் அதை நான் தொழுமிடமாக எடுத்துக் கொள்வேன் என்று சொல்லியனுப்பினேன். நபி (ஸல்) அவர்களும் அவர்களுடைய தோழர்களில் அல்லாஹ் நாடிய சிலரும் வந்தார்கள். நபி (ஸல்) அவர்கள் தொழுது கொண்டிருக்கும் போது நபித் தோழர்கள் ( நயவஞ்சகர்களைப் பற்றி) அவர்களுக்கிடையில் பேசிக் கொண்டி ருந்தார்கள். பிறகு அதில் மாலிக் பின் துக்ஷும் (ரலி) அவர்களுக்குப் பெறும் பங்கிருப்ப தாக கூறினார்கள். அவருக்கெதிராக நபியவர் கள் பிரார்த்தித்து அவர் அழிந்து போக வேண்டும் என்றும் அவருக்கு தீங்கு ஏதும் நேர வேண்டும் என்றும் விரும்பினார்கள்.

நபி(ஸல்) அவர்கள் தொழுது முடிந்ததும் அல்லாஹ்வைத் தவிர வேறு கடவுள் இல்லை என்றும் நான் அல்லாஹ்வின் தூதர் என்றும் அவர் சாட்சி கூறவில்லையா என்று கேட்டார்கள். அதற்கு மக்கள் அவர் அவ்வாறு கூறுகிறார் எனினும் அது அவருடைய உள்ளத்தில் இல்லை என்று கூறினார்கள்.

அப்போது நபியவர்கள் அல்லாஹ்வைத் தவிர வேறு கடவுள் இல்லை என்றும் நான் அல்லாஹ்வின் தூதராவேன் என்றும் சாட்சியம் கூறும் ஒருவர் நரகில் நுழைய மாட்டார் அல்லது நரகம் அவரை தீண்ட மாட்டாது என்று கூறினார்கள்.

இந்த ஹதீஸை அறிவிக்கும் அனஸ் (ரலி) அவர்கள் கூறும் போது இந்த ஹதீஸ் என்னை வியப்படையச் செய்தது. ஆகவே நான் என் புதல்வரிடம் இதை எழுதி வைத்துக் கொள்" என்றேன். அவரும் எழுதிக் கொண்டார் என்றார்கள். (அறிவிப்பவர்: அனஸ் (ரலி), நூல்: முஸ்லிம் 54)

அலி (ரலி) அவர்கள் சுட்ட செங்கற்கலால் கட்டிய ஒரு மேடை ( மிம்பர்) மீது நின்று

எங்களுக்கு உரையாற்றினார்கள். அவர்கள் வாள் ஒன்றை வைத்திருந்தார்கள். அதில் ஓர் ஏடு தொங்கவிடப் பட்டிருந்தது. அவர்கள் (தமது உரையில்) ‘அல்லாஹ்வின் மீது ஆணையாக அல்லாஹ்வுடைய வேதத்தையும் இந்த ஏட்டையும் தவிர ஓதப்படுகின்ற நூல் எதுவும் எங்களிடம் இல்லை என்று கூறிவிட்டு அதை விரித்துக் காட்டினார்கள். அதில் (உயிரீட்டுத் தொகையாக அபராதம் செலுத்தப் பட வேண்டிய) ஒட்டகங்களின் வயது விவரங்கள் இருந்தன.

மேலும் அதில் பின்வருமாறு எழுதப் பட்டிருந்தது. மதீனா நகர் “அய்ர்” எனும் மலையிலிருந்து இன்ன ( ஸவ்ர்) இடம் வரை புனிதமானதாகும். அதில் யார் ( மார்க்கத்தின் பெயரால்) புதிதாக ஒன்றை ஏற்படுத்து கின்றானோ அவன் மீது அல்லாஹ்வின் சாபமும், வானவர்கள் மற்றும் அனைத்து மக்களின் சாபமும் உண்டாகும். மேலும் அவன் புரிந்த கடமையான வழிப்பாட்டையும் கூடுதலான ( நஃபிலான) வழிப்பாட்டையும் அவனிடமிருந்து அல்லாஹ் ஏற்கமாட்டான்.

முஸ்லிம்களில் யார் அடைக்கலம் அளித்தாலும் அது ஒன்றே ( மற்ற முஸ்லிம்கள் தரும் அடைகலத்திற்குச் அது சமமானதாக) ஆகும். அவர்களில் கீழ் மட்டத்தில் உள்ளவர்கள் கூட அடைக் கலம் அளிக்க முன்வரலாம். ஒரு முஸ்லிம் அளித்த அடைக் கலத்தை யாரேனும் முறித்தால் அவன் மீது அல்லாஹ் வின் சாபமும் வானவர்கள் மற்றும் மக்கள் அனைவருடைய சாபமும் ஏற்படும். அவனிடமிருந்து அவன் செய்த கடமையான வணக்கம், கூடுதலான ( நபிலான) வணக்கம் எதையுமே அல்லாஹ் ஏற்க மாட்டான்.

தன்னை விடுதலை செய்த எஜமானர் களின் அனுமதியின்றி வேறு யாரையேனும் வாரிசுகளாக ஆக்கிக் கொள்ளும் அடிமையின் மீது அல்லாஹ்வின் சாபமும் மற்றும் மக்கள் அனைவருடைய சாபமும் ஏற்படும். அவன் செய்த கடமையான வணக்கம் ( நபி லான) கூடுதலான வணக்கம் எதையுமே அல்லாஹ் ஏற்க மாட்டான்.” அறிவிப்பவர்: யஸீத் பின் ஷரீக் அத்தைமி ( ரஹ்) ( நூல்: புகாரி-1870, 7300)

மக்கா வெற்றிக் கொள்ளப்பட்ட ஆண்டில் நபி (ஸல்) அவர்கள் மக்கள் மத்தியில் ஆற்றிய உரையில் மக்களின் மானம், மரியாதை, மக்காவின் புனிதம் மற்றும் குற்றவியல் சட்டங்கள் பற்றி கூறிய போது, யமன் வாசிகளில் ஒருவர் அல்லாஹ்வின் தூதரே! அதை எழுதித் தாருங்கள் என்று கேட்டார். அப்போது நபியவர்கள் இவருக்கு எழுதிக் கொடுங்கள் என கூறினார்கள். (ஹதீஸின் சுருக்கம்) (நூல்: புகாரி 112, 2434)

அம்ரு இப்னு உமையா(ரஹ்)அவர்கள் கூறியதாவது: நான் அபூ ஹுரைரா(ரலி) அவர் களிடம் ஒரு ஹதீஸை கூறினேன். அந்த ஹதீஸை அபூ ஹுரைரா (ரலி) ஏற்க மறுத்தார்கள். அப்போது நான் இந்த ஹதீஸை உங்களிடமிருந்துதான் செவியுற்றேன் என்று கூறினேன். என்னிடம் செவியுற்றிருந்தால் அது என்னிடம் எழுதப்பட்டிருக்கும் என கூறிவிட்டு என்னுடைய கையை பிடித்துக் கொண்டு வீட்டுக்குள் நுழைந்து நபிகளாரிடமிருந்து கேட்டு எழுதி வைக்கப்பட்ட ஹதீஸ் நூல்களை எடுத்துக் காட்டி உமக்கு நான் ஹதீஸ்

அறிவித்திருந்தால் அது என்னிடம் எழுதி வைக்கப்பட்டிருக்கும் என்றார்கள். ( நூல்: பத்ஹுல் பாரி அர்ரத்து அலாமன் அன்கர ஹுஜ்ஜியதஸ் சுன்னா பக்கம்.465.)

சஹாபாக்களால் பதிவுசெய்து வைக்கப் பட்ட ஹதீஸ் தொகுப்பு ஸஹீபதுஸ் ஸஹீஹா என்றும் ஸஹீபதுஸ் ஸாதிகா என்றும் அழைக்கப்பட்டது. இந்த ஸஹாபாக்கள் இமாம் அஹ்மத் இப்னு ஹம்பல் ( ரஹ்) அவர்களின் "முஸ்னத் அஹ்மதில்" பதிவாக்கப் பட்டுள்ளது. சஹாபாக்களின் மாணவர்களால் எழுதப்பட்ட தொகுப்பும் அவ்வாறே பாதுகாக்கப் பட்டது. சஹீபாக்கள் என பிரபல்யமான தொகுப்புக்கள் பின் வருமாறு அறியப்பட்டது:

சஹாபா அபூபக்கர் சித்தீக்(ரலி)

சஹாபா அலி(ரலி)

சஹாபா அப்துல்லாஹ் இப்னு அவ்பா(ரலி)

சஹாபா அபூமூஸல் அஷ்அரி(ரலி)

சஹாபா ஜாபிர் இப்னு அப்துல்லாஹ்(ரலி)

சஹாபா அபூ ஹுரைரா(ரலி)

சஹாபா சஹ்த் இப்னு உபாதா அல் அன்சாரி(ரலி)

சஹாபா சும்ரத் இப்னு ஜூன்துப் (ரலி)

சஹாபா அப்துல்லாஹ் இப்னு அவ்பா(ரலி)

மூன்றாம் நூற்றாண்டில் ஹதீஸ் தொகுப்பின் பணியின்போது இவை அனைத்தும் திரட்டப்பட்டு பதியப்பட்டன. (நூல்: கிதா பதுஸ் சுன்னதின் நபவிய்யா பீ அஹ்தின் நபி (ஸல்) வஸ் ஸஹாபா வ அஸ ருஹா பி ஹிப்லிஸ் ஸுன்னதின் நபவி பக்கம் 28. இதத்வீனஸ் ஸுன்னதின் நபவிய்யா நஷ்அத்உ வ ததவ்வுருஉ மினல் கர்னில் அவ்வல் இலா நிஹாயதில் கர்னில் தாஸிஹில் ஹிஜ்ரி பக்கம்.78.)

அபூ ஹுரைரா(ரலி) அவர்களின் மாணவர் பஷீர் இப்னு நஹீக் ( ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள்: நான் அபூ ஹுரைரா ( ரலி) யிடமிருந்து கேட்ட ஹதீஸ்களை எழுதிக் கொள்வேன். அவரை விட்டு பிரியும் போது “உங்களிடமிருந்து கேட்டு எழுதிக் கொண்ட ஹதீஸ்கள் இவைகள் சரிதானா என்று

பாருங்கள்" என்பேன். அவைகளைப் பார்த்துவிட்டு "ஆம் சரிதான்" என அபூஹுரைரா ( ரலி) அவர்கள் கூறுவார்கள். (நூல்: அர்ரத்து அலாமன் யுன்கிர உஜ்ஜியதஸ் சுன்னா பக்கம் 457)

அனஸ் பின் மாலிக்(ரலி) அவர்கள் தங்களுடைய பிள்ளைகளை ஹதீஸ்களை எழுதி வைத்துக் கொள்ளுமாறு தூண்டுவார்கள். என் அருமை பிள்கைளளே! ஹதீஸை நூலுடன் தொடர்ப்பு படுத்திக் கொள்ளுங்கள் என்றும் எழுதாதவரின் கல்வியை கல்வியாக நாங்கள் கணக்கிட மாட்டோம் என்றும் கூறு வார்கள் . (நூல்: தத்வீனுஸ் ஸுன்னதில் நபவிய்யா பக்கம் 77)

ஹதீஸை நூலுடன் தொடர்புபடுத்திக் கொள்ளுங்கள் என உமர் ( ரலி) கூறினார்கள். (நூல்: தத்வீனுஸ் ஸுன்னதின் நபவி பக்கம்77)

அப்துர்ரஹ்மான் இப்னு அபீயஃலா (ரஹ்) கூறுகிறார்கள்: நான் 120 க்கும் அதிகமான அன்சாரி நபித்தோழர்களை சந்தித்துள்ளேன். அவர்களில் ஒருவர் ஒரு

ஹதீஸை கூறினால் அதற்கு இன்னுமொரு நபித்தோழரை பொறுப்பாக்குவதை விரும்பக் கூடியவர்களாக இருந்தார்கள். அவ்வாறே ஏதேனும் ஒரு தீர்ப்பை கூறினால் அதற்கும் ஒரு தோழரை பொறுப்பாக்கிக் கொள்வதை விரும்பக் கூடியவர்களாக இருந்தர்கள். ( நூல்: தத்வீனுஸ் ஸுன்னதின் நபவிய்யா பக்கம் 31)

ஹதீஸ்களை எழுதிவைத்துக் கொள்ள அனுமதி வழங்கிய நபி (ஸல்) அவர்கள் கடைசி வரை அந்த அனுமதியை ரத்துச் செய்யவில்லை என்பதை பின்வரும் ஹதீஸ் தெரிவிக்கின்றது.

நபி(ஸல்) அவர்களுக்கு மரணம் நெருங்கி விட்ட நேரத்தில் "என்னிடம் ஒரு ஏட்டைக் கொண்டு வாருங்கள். நான் உங்களுக்கு ஒரு ஏட்டை எழுதித் தருகிறேன். அதன் பின் நீங்கள் வழி தவற மாட்டீர்கள்..." என கூறினார்கள். (நீண்ட ஹதீஸின் சுருக்கம். ( நூல் : புகாரி 114, 7366, 4432, 5669)

அல்குர்ஆனும் அல்ஹதீஸும் வாழ்வின் அடிப்படைகள் என்ற வகையில் இவ்விரண்டும் முழுவடிவில் நபி (ஸல்) அவர்கள் காலத்திலே

பாதுகாக்கப்பட்டு நடை முறைப்படுத்தப் பட்டது. மதீனா நகரம் “தாருல் ஹிஜ்ரா” என்று அழைக்கப்பட்டது போலவே “தாருஸ் ஸுன்னா” சுன்னா நடைமுறைப்படுத்தப்பட்ட இடம் எனவும் சஹாபாக்களால் அழைக்கப் பட்டது.(நூல்: புகாரி 7323)